பக்கங்கள் எட்டு

யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
# VALAMPURI

விலை ரூபா 5.00

[illegible] நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 16 வெள்ளிக்கிழமை (01-09-2000) தொ. பேசி;- 3378 ஒலி: 256

★ ஜனாதிபதி சந்திரிகா - அஷ்ரப் முறுகல்நிலை

# முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது

# இராஜினாமாவும்வாபஸ்பெறப்படும்?

## நள்ளிரவு 4மணி நேர சந்திப்பில் முடிவு

(கொழும்பு விசேட நிருபர்)

**பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு மிடையேகடந்த ஒருவார காலமாக நிலவி வந்த முறுகல்நிலை நேற்று முன்தினம இடம்பெற்ற 4மணி நேரப் பேச்சுவார்த்தை யின் பின் ஓரளவு முடிவிற்கு வந்துள்ளது.**

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம் அஷ்ரப்பும நேற்றிரவு நடத்திய சமரசப் பேச்சு வார்த்தையை அடுத்து முறுகல்நிலை முடிவிற்குவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்காவுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் எம்.எச். எம். அஷ்ரப்பிற்கும்இடையே நேற்று முன்தினம் இடம் பெற்ற பேச்சுவார்த்தை இரவு 9.30 மணி முதல் நள்ளிரவு 1.30மணி வரை இடம் பெற்றது.

சுமார் 4 மணிநேரம் இடம் பெற்ற இப் பேச்சு வார்த்தையில் இருதரப்பினரும் பரஸ்பரம் புரிந்துணர்வின் அடிப்படையில் பேசிக் கொண்டனர்.

இப் பேச்சுக்களின் போது அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமாசெய்தமுடிவை மீள் பரிசீலனை செய்யுமாறு அஷ்ரப்பை ஜனாதிபதி கேட்டுக் கொண்டதை அடுத்து இராஜினாமாவை மீளபரிசீலனை செய்வதாக அஷ்ரப் ஜனாதிபதியிடம் உறுதி அளித்துள்ளார்.

இப் பேச்சு வார்த்தைகளை அடுத்து மட்டக்களப்பு. அம்பாறை, திருமலை மாவட்டங்களில் பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு தயார் என்று அஷ்ரப் தெரிவித்தார்,

யாழ்ப்பாணம், வன்னி, கொழும்பு, கண்டி ஆகிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட பயணிகள் கப்பல் சேவை மேலும் 100 பேருக்கு பயணச் சீட்டு

பருத்தித்துறைக்கும் திருமலைக்கும் இடையில் இடம் பெறவுள்ள விசேட கப்பலில் பயணம் செய்வதற்குமேலும் நூறு பயணிகளுக்கு பயணச் சீட்டு வழங்கப்படவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

மேற்படி நூறு பேருக்கான பயணச் சீட்டுக்கள் நாளை சனிக்கிழமை யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படுமெனவும் விசேட கப்பல் சேவை இடம் பெறும் திகதி பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுமென வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## மூன்று மாவட்டங்களில் ஐ.தே.கட்சி வேட்பு மனுத் தாக்கல்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி மூன்று மாவட்டங்களுக்கான தேர்தல் வேட்பு மனுக்களை நேற்று தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி, மாத்தளை அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலேயே வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

இதேவேளை நுவரெலியாவில் மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த சந்திரசேகரன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின்முன்னாள் எம்பி. எவ். சதாசிவம் ஆகியோர்தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். (வ)

## வவுனியாவில்சுயேட்சைகுழு வேட்புமனுத் தாக்கல்

(வவுனியா அலுவலகநிருபர்)

முன்னாள்சமூக சேவைகள் பிரதிஅமைச்சர்எஸ்.எஸ் எம். அபூபக்கர் தலைமையிலான சுயேட்சைக் குழு நேற்றுக் காலை (வியாழன்) வன்னி மாவட்ட பொதுத்தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல்செய்துள்ளது;

இந்த சுயேட்சைக் குழுவில் நான்கு பெண்களும் களத்தில் குதித்துள்ளனர்.

வேட்பாளர் பட்டியல் விபரம்: முகமட் முனுஸி செயட் றகுமதுல்லா மரிக்கார்,குஸைன் சாகிபுமுகமட்அபூபக்கர், சேகு அப்துல் காதர் நிசான், நயினா லெப்பே மரிக் கார்-செய்த் றகுமத்துல்லா மரிக்கார், செல்லத்துரை கனகம்மா, முகமட் யாஸீன் ஜான்சார், முகமட் பாறுக்

(8ஆம் பக்கம் பார்க்க

## மேடைக்கு அருகில் கைக்குண்டு

(கொழும்பு)

மகர மீகவத்த பகுதியில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் கைத்தொழில் பிரதி அமைச்சர் அத்துலத் ஸ்ரீ நிமல ஸ்ரீ கலந்து கொண்ட பிரச்சார மேடைக்கு அருகே கைக்குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இக்கைக்குண்டு மதகு ஒன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர் (வ)

## வன்னியில் தமிழரசுக் கட்சி தேர்தலில் போட்டி

(வவுனியா)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களை நேற்று மாலை வவுனியா மாவட்டச் செயலகத்தில்தாக்கல்செய்தது.

பி. கே. ஜி. ரஞ்சித் தலைமையில்கட்சியின் செயலாளர் கே. ரி. என். சர்மின் மனுக்களைத் தாக்கல்செய்தார்:

போட்டியிடும் வேட்பாளர்களின் விபரம்வருமாறு

★ எஸ்.சகாய தேவன்
★ எ.செல்வகுமார்
★ சபாண் பழநிலா
★ என்.பிரியங்கா
★ எஸ். மூனியம்மாள்
★ எம். இராசேந்திரன்
★ எஸ். சிவதாசன்
★ எஸ். செல்லையா (வ)

## அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் இன்று வேட்புமனுத் தாக்கல் செய்வர்

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் பொதுத் தேர்தலில்,யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அகில இலங்கைத் தமிழ்க்,காங்கிரஸ் சார்பில் போட்டி இடவிருக்கும் வேட்பாளர்கள் தங்கள் வேட்பு மனுக்களை அந்தந்த மாவட்டத தேர்தல் அலுவலகத்தில் இன்று தாக்கல்செய்யவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் அ. விநாயகமூர்த்தி தலைமையிலும், திருகோணமலையில் சட்டத்தரணி செல்வி சுபாஜினி தலைமையிலும்,மட்டக்களப்பில் சட்டத்தரணி சச்சிதானந்தம் தலைமையிலும் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## யாழ். பருத்தித்துறை வீதி வாகன போக்குவரத்திற்கு தடைசெய்யப்படும்?

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை வீதி மிகவிரைவில் வாகனப் போக்குவரத்திற்குத் தடை விதிக்கப்படலாமென நம்பத்தகுந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன;

கைதடி, நாவற்குழி ஆகிய பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அடிக்கடி இடம் பெறுவதால் பருத்தித்துறை வீதியால் வாகனப்போக்குவரத்து இடம்பெறுவது படையினரின் பாதுகாப்பிற்கு நலலதல்ல எனப் படைத்தரப்பினர்கருதுவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன;

கல்வியங்காடு தொடக்கம் அச்சுவேலிப்பகுதி வரையான பருத்தித்துறை வீதியில் வாகனப் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டால் இராசபாதை வீதி நிலாவரையூடாகவே பருத்தித்துறைக்கான போக்குவரத்து இடம் பெறுமெனவும் தெரியவருகிறது. (ந)

## புலிகள் 'தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த 29 ஆம் திகதி பளைப்பகுதியில் தவறுதலாக இடம் பெற்ற வெடிவிபத்தின் போது

★ சாரங்கன்/ அழகன் மயில்வாகனம் அரவிந்தன் (யாழ்ப்பாணம்)
★ மேஜர் தீசன் / ஒசையன் நாகராஜா மதிதரன் (கிளி

8ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடி சுற்றிவளைப்பு

நெல்லியடிப்பகுதி நேற்று அதிகாலை 5 மணியளவில் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு கடுமையான சோதனைக்குட்படுத்தப் பட்டது.

அதிகாலை வேளை இராணுவம் வீடுவீடாகச் சென்று குடியிருப்பாளர்களின் அடையாள அட்டைகளைப் பெற்றுடன் அவர்களை நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் கோவிலுக்கு வரவழைத்து சோதனை நடத்தப்பட்டது-

இத் திடீர் சோதனையின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டை 18ஆம் திகதி விநியோகம்

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யும் வேலைகள் எதிர்வரும் 18ஆம் திகதி முதல்ஆரம்பிக்கப்படும் என்று தபால்மா அதிபர் தெரிவித்தார்.

இது தொடர்பாக தபால்மா அதிபர் விசேட கூட்டமொன்றை நேற்று கூட்டி இருந்தார்.

இக் கூட்டத்தில் வாக்குப் பெட்டிகளை விரைவாகக் கொண்டு செல்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

தாவடி தெற்கு, கொக்குவிலைச் சேர்ந்த நாகலிங்கம் தவராசா என்பவருடைய விசேட அடையாள அட்டை இல. 0906030492 இலில் நிர்வாக காரியாலய பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 22 வெள்ளாந்தெரு (வலம்புரிக்கு முன்) என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்; (1672)

# தென்மராட்சி இடம்பெயர்வையடுத்து பிச்சைஎடுப்போர் தொகை அதிகரிப்பு

## குடும்பச்சண்டையும் ஏற்படுகிறதாம்

(தென்மராட்சி)

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி இடம்பெயர்வுகளைத் தொடர்ந்து, நாளாந்த கூலித்தொழில்களில் ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கானவர்கள் எவ்வித வருமானமும் இன்றிஇருந்து வருகின்றனர். இதன்காரணமாக வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களில் ஏமாற்றுப்பேர்வழிகளும், பிச்சைஎடுப்பவர்களின் தொகையும் அதிகரித்துக் காணப்படுகின்றது;

பொதுவாக இவ்விரு பிரதேசங்களிலுமுள்ள சந்தைகள், வர்த்தகநிலையங்கள் மற்றும் நகரப்புறங்களில் பிச்சை எடுப்போரின் தொகை அதிகரித்து வருகின்றது. இத்தகையவர்கள் தமது வயிற்றுப்பிழைப்புக்காகவே இவ்விதம் நடக்கவேண்டியுள்ளதாகவும் கூறிவருகின்றனர்;

அதேவேளை, வருமானமில்லாத குடும்பங்களில் பல்வேறுவிதமான நடைமுறைக் கஷ்டங்களும், பிரச்சினைகளும் நிலவிவருவதால் குடும்பச்சண்டைகள், உறவுச்சண்டைகள் அடிக்கடி ஏற்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது;

அத்துடன் வறுமை, வேலையின்மை போன்ற காரணங்களை முன்னிலைப்படுத்தி பல கணவன்மார்கள் தமது குடும்பங்களைக் கைவிட்டுப்பிரிந்து இருப்பது பற்றியும் அறியப்படுகின்றது இத்தகைய குடும்பங்களின் தலைமைப்பதவிகளை பெண்கள் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர் எனத்தெரிகின்றது.

இதன்பொருட்டு கிராமங்களில் மிகக்குறைந்த நாளாந்த வேதனத்துக்கு விவசாயக் கூலிகளாக வயல்களில் வேலைசெய்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது. (க-77)

# அளவெட்டியில் தொடரும் திருட்டு

(மண்கும்பான்)

அளவெட்டி மத்தி கேணிக்கரைப்பகுதியில் உள்ள வீடுகளில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன,

இப்பகுதியிலுள்ள எஸ். செல்வநாயகம் என்பவரது வீட்டில் திருட்டுக்காகச் சென்று அது கைகூடாதமையால் அயலிலுள்ள நான்கு வீடுகளில் புகுந்து தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்;

தொடரும் இத்திருட்டுகளைத் தடுக்கும் நோக்குடன் அப்பகுதி மக்கள் ஒன்றுகூடி விழிப்புக்குழு ஒன்றினையும் அமைத்துள்ளனர். (த-83)

# போச் கவர்கள் வந்து சேர்ந்தன

(சுண்டுக்குளி)

பல மாத கால இடைவெளியின் பின் விசேட அடையாள அட்டைக்கான போச் கவர்கள் (PO H) கொழும்பில் இருந்து யாழ். செயலகத்திற்கு தபால் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன,

மேற்படி போச் கவர்கள் இல்லாததினால் கடந்த சில காலமாக விசேட அடையாள அட்டைகளிற்கான வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (சு)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் கல்வி உபகரணங்கள் கடைகளில் விற்பனையாகின்றன

(தென்மராட்சி)

இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மாவட்டத்திலுள்ள சில அரச சார்பற்ற நிறுவனங்களினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உபகரணங்களை ஏழை மாணவர்களின் பெற்றோர் கடைகளில் விற்றுப் பணம் பெற்ற சம்பவங்கள் வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களில் இடம் பெற்றுள்ளன;

இத்தகைய சம்பவங்களினால் பாடசாலைகளுக்குச் செல்வதில் அக்கறையுள்ள மாணவர்கள் கல்வி உபகரணங்கள் இல்லாமை காரணமாக பாடசாலைகளுக்குச் செல்லாமல் வீடுகளில் தங்கியிருப்பதாக தெரியவந்துள்ளது.

அதே வேளை மேற்படி சம்பவங்கள் பற்றிக் கேள்வியுற்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் இத்தகைய பெற்றோரின் செயல் குறித்து மிகுந்த கவலையும் வேதனையும் அடைந்துள்ளதாக அறியப்படுகின்றது; (சு-77)

# தலைமை அலுவலகம் கோண்டாவிலில்

(கல்வயல்)

யாழ்ப்பாண தனியார்பாரவூர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் அண்மையில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களைத் தொடர்ந்து தற்போது இருபாலை, கோண்டாவில்வீதியில், கோண்டாவில் புகையிரத நிலையத்துக்குச் சமீபமாக தனியார் கட்டடமொன்றில் இயங்குகிறது.

இவ்வலுவலகம் முன்னர் கச்சேரிக்கு அண்மையிலுள்ள பழையபூங்காவீதியில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-111)

# ஊர்காவற்றுறையில் சட்ட விரோதமாக மாடுகள் அழிப்பு இனம் அருகிப்போகும் அபாய நிலை

## பொது மக்கள் அச்சம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பகுதியில் கரம்பொன், மெலிஞ்சிமுனை, சின்னமடு, நாரந்தனை ஆகிய இடங்களில் சட்டவிரோதமான முறையில் பெருந் தொகையான மாடுகள் இறைச்சிக்காக அழிக்கப்படுவதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

ஆட்கள் இல்லாத வீடுகளில் வைத்தே மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதாகவும், இவற்றில் இருந்து வீசப்படும் கழிவுகளில் இருந்து வீசும் துர்நாற்றத்தினால் இவ்வீதிகளில் பயணஞ் செய்யும் பொது மக்கள் சிரமத்திற்குள்ளாகுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு சட்டவிரோதமாக பெருந் தொகையான மாடுகள் அழிக்கப்படும் பட்சத்தில் எதிர் காலத்தில் இங்கு மாடுகள் அழிந்து போகும் அபாய நிலை உருவாகி உள்ளதாக பொது மக்கள் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் இதற்குரிய நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டும் என பொது மக்கள் எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-75)

## அரசு-ஸ்ரீல. மு. காங்கிரஸ்

# கூட்டு ஏற்படுத்தப்பட்டால் பொதுத்தேர்தலிலும் இணைய முடியும்

## கட்சி வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையிலான முறுகல் நிலையை சுமுகமான முறையில்தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் யாழ்ப்பாணம், வன்னி, கொழும்பு, கண்டி தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதென முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

பொதுஜன ஐக்கிய முன்னணி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு முதல் நிபந்தனையாக இடைநிறுத்தம் செய்யப்பட்டபுத்தளம்நகரசபைத் தலைவர் பாயிசை மீண்டும் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# பல்கலையில் திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் திரைப்படக் காட்சித் தொடரில் அமரக் கலைஞன்குருதத்தின் தரகஸ் கபூல் என்னும் ஹிந்தி திரைப்படம் நாளை சனிக்கிழமை 2 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு புலியிற்றுறைமண்டபத்தில் இடம் பெறவுள்ளது;

ஆர்வமுடையோர் எவரும் இப் படக்காட்சிக்கு வருகை தர முடியுமென இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (சு)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 29-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றது:

### சங்கானை

| | |
|---|---|
| 138407 ஏ | 150782 ஏ |
| 150784 பி | 150784 சி |
| 150784 டி | 155144 ஏ |
| 155388 ஏ | 155388 பி |
| 155388 சி | 156020 ஏ |
| 156054 ஏ | 156054 பி |
| 156054 சி | 157797 ஏ |
| 157797 பி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 131571 ஏ | 131571 பி |
| 144901 ஏ | 154323 ஏ |
| 154512 ஏ | 154512 பி |
| 154512 சி | 154512 டி |
| 154559 ஏ | 154559 பி |
| 154559 சி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 144754 ஏ | 144855 ஏ |
| 144855 பி | 144855 சி |
| 144856 ஏ | 144856 பி |
| 144856 சி | 144856 டி |
| 144857 ஏ | 144857 பி |
| 144857 சி | 147688 ஏ |
| 147688 பி | 147688 சி |
| 147688 டி | 156723 ஏ |
| 156902 ஏ | 147442 ஏ |
| 152206 ஏ | 152206 பி |
| 152206 சி | 152206 டி |
| 152207 ஏ | 152207 பி |
| 152207 சி | 152207 டி |
| 152225 ஏ | 152225 பி |
| 152225 டி | 155177 ஏ |

| | |
|---|---|
| 155215 ஏ | 155424 ஏ |
| 155424 பி | 155424 சி |
| 157708 ஏ | 157865 ஏ |
| 157865 பி | 157865 டி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 127264 ஏ | 144070 ஏ |
| 151960 ஏ | 151960 பி |
| 151960 சி | 151960 டி |
| 151960 ஈ | 152530 ஏ |
| 155293 ஏ | 155348 ஏ |
| 155348 பி | 155348 சி |
| 155376 ஏ | 155378 ஏ |
| 155378 பி | 155378 சி |
| 155378 டி | 155378 ஈ |
| 156032 ஏ | 156032 பி |
| 156076 ஏ | 157735 ஏ |
| 157871 ஏ | 157871 பி |
| 157871 சி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 150792 ஏ | 151873 ஏ |
| 151873 பி | 151963 ஏ |
| 153413 ஏ | 153413 பி |
| 153413 சி | 1ç8414 ஏ |
| 155089 ஏ | 155235 ஏ |
| 155235 பி | 155235 சி |

### உடுவில்

| | |
|---|---|
| 157621 ஏ | 157621 பி |
| 157621 சி | 131725 ஏ |
| 150423 ஏ | 150423 பி |
| 152140 ஏ | 152140 பி |
| 155252 பி | 155382 ஏ |
| 155450 ஏ | 155476 ஏ |
| 155477 ஏ | 157752 ஏ |
| 157752 பி | 157771 ஏ |
| 157800 ஏ | 157800 பி |
| 157848 பி | 157881 ஏ |
| 157881 பி | 157904 ஏ |
| 157904 பி | 157940 ஏ |
| 157940 பி | 157941 ஏ |

(சு)


யாழ். லயன்ஸ் கழகம் நிகழ்த்தும்
இலவசமருத்துவப்பரிசோதனைகளும்
மருந்து நிவாரணமளித்தலும்
நோய் தடுப்பு விளக்கமளித்தலும்
காலம்: 02-09-2000
நேரம்: காலை 9.30
இடம்: ஆறுகால் மடம் அறிவொளி ச. ச. நிலையம்
மருத்துவப் பரிசோதகர்: DR. K. குலநாயகம்
(யாழ்: போதனா வைத்தியசாலை)
கண் பரிசோதகர்: P.J. பெர்னாண்டோ ஸ்தாபனத்தார்
நோய்த் தடுப்பு விளக்கம்:
DR. லயன் S. S. அருளானந்தம்
(கி/766)



கண்ணீர் அஞ்சலி

ஜெயசீலன் பெர்னாண்டோ

(சிற்றி செவன்ஸ்ரார் முகாமையாளர்,
செக்கட்டித்தெரு, கொழும்பு, 12)

30.08.2000 புதன்கிழமையன்று எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்புக்குப் பாத்திரமான ஜெயசீலன் பெர்னாண்டோ அவர்களுக்கு நெஞ்சம் தாழாத அஞ்சலியை செலுத்துவதோடு அன்னாரை இழந்து பரிதவிக்கும் அவரது குடும்பத்துக்கு எமது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்-

மதுரா அழகுமாடம் ஸ்தாபனத்தார்,
297, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (1675)



NOTICE
UNIVERSITY OF JAFFNA. SRI LANKA
Faculty Of Medicine

The Orientation Programme of the New Batches (Academic year 1999/2000 2000/2001 will commence on 04th September 2000.

Academic Lecturers will commence on 09 October 2000 for these batches,

Lecturers for other batches (including 20th batch) will commence on 04 September 2000.

REGISTRAR,
2000-08-29

C/765

# செய்தித் துளிகள்

## உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள் மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் உற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும் இவ் உற்சவத்தில் 12 ஆம் திகதி தேர் திருவிழாவும், 13 ஆம் திகதி தீர்த்ததிருவிழாவும், 14 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (த)

## செயலமர்வும் கருத்தரங்கும்

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 2ஆம்தர ஆசிரியர் செயலமர்வும் கருத்தரங்கும் இன்று வெள்ளிக்கிழமை 1 ஆம் திகதியும் நாளை சனிக்கிழமை 2ஆம் திகதியும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுக் கருத்தரங்கில் 2000 ஆம் ஆண்டில் தரம் 2 இல் கற்பிக்கின்ற ஆசிரியர்களை கலந்துகொள்ளுமாறு ஆரம்பக்கல்வி முதன்மையாசிரியர் நா. சுவாமிநாதன் அறிவித்துள்ளார். (த-79)

## ஆங்கிலம் பயில விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் (யாழ்ப்பாணம் உட்பட) ஆங்கில பாட நெறியில் பயில்வதற்கு க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் அல்லது ஆங்கிலஇலக்கியத்தில் திறமைச்சித்தியுடன் க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஆங்கிலம் உட்பட 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

அல்லது க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் அல்லது ஆங்கில இலக்கியத்தில் விசேட சித்தியுடன் க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஏதாவது 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஏற்கனவே உள்ள 7 துறைகளுடன் புதிதாக நூலகமும் தகவல் துறைக் கல்வியும் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அத்துறைக்கும் உரிய தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்க முடியுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## பனர்கள் அகற்றப்பட்டன

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு நகரில் வாக்காளர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த பனர்கள், கட்டவுட், விளம்பர பலகைகளை கடந்த செவ்வாய் மாலை பொலிஸார் அகற்றியுள்ளனர்.

ஈ. பி. டி. பி., புளொட், தமிழர் விடுதலைக்கூட்டணியினர் பதாதைகள், கட்டவுட் என்பனவற்றை காட்சிக்காக வைத்திருந்தனர்.

வாகனங்களில் வந்த பொலிஸார் இவற்றை எடுத்துச் சென்றுள்ளனர். (சு-60)

## நிவாரணம் வழங்கல்

(மல்லாகம்)

இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் அவ்விடங்களில் தங்கியிருப்போருக்கான நிவாரண பணிகள் சுன்னாகம், உடுவில் இணுவில் பகுதியில் கடந்த 24 ஆம் திகதி முதல் ப. நோ. கூ. சங்கங்களூடாக வழங்கப்பட்டுவருகிறது. (த-14)

## உதைபந்தாட்ட தாச்சி போட்டிகள்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட மட்டப் பாடசாலைகளிடையே உதைபந்தாட்டம் மற்றும் தாச்சிப்போட்டிகளை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாய் கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

உதைப்பந்தாட்டத்திற்கான விண்ணப்பமுடிவுத்திகதி இன்று வெள்ளிக்கிழமை 1 ஆம் திகதிக்கு முன்பாகவும், தாச்சிப் போட்டிக்கான விண்ணப்பத்தினை இம் மாதம் 12ஆம் திகதிக்கு முன்பாகவும் அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களிற்கு அறிவிக்கப்பபட்டுள்ளது. (க)

## இன்று பொதுக்கூட்டம்

(மல்லாகம்)

கோண்டாவில் சத்தியசாயி நிலையத்தில் நடைபெறும் ஆன்மீகவகுப்பில்பங்குபற்றும் மாணவர்களிற்கும் அவர்களின் பெற்றோருக்குமான பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை 1ஆம்திகதி நடைபெறவுள்ளது. (த)

## கொக்குவிலில் விபத்து

(கொக்குவில்)

திருநெல்வேலி சந்தியில் இடம்பெற்ற லொறி-மோட்டார் சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றவர் சாதுரியமாக பாய்ந்ததில் தப்பிக் கொண்டார்.

மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்தது. [க]

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு சனசமூக நிலைய கட்டட நிதிக்காக எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடை பெறவுள்ளது.

கந்தரோடை சவாரித் திடலில் நடைபெறவுள்ள மாட்டு வண்டிச் சவாரிப்போட்டியில் முதலாம் பரிசாக தங்கப் பதக்கம்வழங்கப்படவுள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் அன்பளிப்புச்செய்துள்ள இவ் முதலாம் பரிசான தங்கப் பதக்கத்தை போட்டி முடிவில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அச்சுவேலிப் பிரதேச சபை அமைப்பாளரும் வலி கிழக்கு பிரதேச சபை தலைவருமான பூ. குணசிங்கம் வழங்குவார். (க)

## வேப்பமரங்கள் களவாடப்பட்டன

(சுண்டுக்குளி)

ஈச்சமோட்டையில் உள்ள விதானையார் ஒழுங்கைப் பகுதியில் வேப்பமரங்கள் களவாக வெட்டி எடுத்துச் செல்லப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது. ஐந்து பேர் கொண்ட குழு ஒன்று கிராமசேவகரின் காணிக்குள் நுழைந்து வேப்பமரங்களை வெட்டிய போது அயலவர்கள் குறுக்கிட்டு விசாரித்ததில் தாம் கிராமசேவகரிடம் இவற்றை விலைக்குப் பெற்றே வெட்டுவதாகத் தெரிவித்ததுடன் வெட்டப்பட்ட மரங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர். இவற்றின் பெறுமதி 4000 ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சு)

மட்டு. விபுலானந்த

இசைக் கல்லூரி கிழக்கு பல்கலையுடன்

# விரைவில் இணைக்க முயற்சி

### உயர்மட்ட கூட்டத்தில் தீர்மானம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடனக் கல்லூரியைக் கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் கலாசார அமைச்சில் இடம் பெற்ற உயர்மட்ட மாநாட்டின் போது எடுக்கப்பட்டதாக அரசியல் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இருவாரங்களிற்குள்கிழக்கு பல்கலைக் கழக உபவேந்தரிடமிருந்து செயல்திட்ட அறிக்கையைப் பெற்று அதன் பிரகாரம் திறைசேரியில் இருந்து நிதியைப் பெற்றுத்தர கலாசார அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்

மேற்படி செயல்திட்ட அறிக்கையின் பிரகாரம் ஆளணி விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுவதுடன் நிதியையும் பெற நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாநாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சோ. கணேசமூர்த்தி, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உபதலைவர் பேராசிரியர் ஜிப்றி கிழக்குப்பல்கலைக் கழக உபவேந்தர் எம். எஸ். மூக்கையா இந்து கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ். பரம்சோதி உட்பட பலர் கலந்து கொண்டனர். (சு-60)

# தென்மராட்சிக் கல்விப் பணிமனைக்கு பரமேஸ்வரன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் தற்காலிகமாக இயங்கி வரும் தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனைக்குவடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஈ. பரமேஸ்வரன் நேற்றுமுன்தினம் விஜயம் செய்தார்.

அண்மைக்கால யுத்த நடவடிக்கையினால் தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சியில் இயங்கிவரும் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள், மற்றும் ஆசிரியர்கள் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் இவ்விஜயத்தின் போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகிறது.

இக் கலந்துரையாடலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சிப்பிரதேச அமைப்பாளர் அலெக்சான்டர், வலயக் கல்விப்பணிப்பாளர் செல்வராசா மற்றும் கல்விசார் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ந - 2)

# ஈ.பி.ஆர்.எல்.எவ் [சுரேஸ் அணி] இன்று வேட்புமனுத் தாக்கல்?

(யாழ்ப்பாணம்)

ஒக்ரோபர் மாதம் 10ம் திகதிநடைபெறவுள்ளபாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரம் இன்று அல்லது நாளை தாக்கல் செய்யவுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் [சுரேஸ்] அணியைச் சேர்ந்த த. வில்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தமது கட்சி சுயேட்சையாக யாழ். வன்னிப்பகுதியில் போட்டியிடவுள்ளதாகவும், திருகோணமலையில்போட்டி இடுவது பற்றி முடிவெடுக்கவில்லை என்றும் தெரிவித்தார். அம்பாறையில் தமிழ் மகா சங்கத்துடன் இணைந்து போட்டியிடவுள்ளதாகவும் மட்டக்களப்பில் போட்டியிடவில்லையென்றும் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் மக்களின் தற்போதைய நிலைப் பாடுகளையும் கஷ்டங்களையும்நாம் நன்கு உணர்வோம். இருப்பினும் எமது கட்சியின் நிலைப்பாட்டை எடுத்துக் கூற வேண்டிய தேவை எமக்குண்டு எனத் தெரிவித்தார். (க-3)

# மருந்தகம் உடைக்கப்பட்டு பொருட்கள் திருட்டு

(ஆவரங்கால்)

ஆவரங்கால் சந்தியிலுள்ள சூரியாமருந்தகத்தில் அண்மையில் ஊரடங்குவேளையில் பல பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

மேற்படி மருந்தகத்தின் கட்டடமேல்ஓட்டைப் பிரித்து இறங்கி அதனுள்ளே இருந்த பெறுமதி வாய்ந்த வாசனைத் திரவியங்கள், சவர்க்கார வகைகள், வெந்நீர் போத்தல்கள், மற்றும் பல பொருட்களையும் ரூபா2500 பணத்தையும்எடுத்துச்செல்லப்பட்டன.

இது தொடர்பாக மருந்தக உரிமையாளர் அச்சுவேலிப் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதையடுத்து விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (த-57)

வாழைச்சேனை

# காகித தொழிற்சாலை 5 நாட்களின்பின் மீண்டும் வழமைக்கு திரும்பியது

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை காகித ஆலை 5 நாட்களின் பின்னர் கடந்த புதன்கிழமை திறக்கப்பட்டதாக ஆலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இயந்திரப்பிரிவு ஊழியர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வரும் போராட்டத்தினால் கடந்த 25 ஆம் திகதி முதல் கடதாசிக்கம்பனியின் உயர் மட்டம் விடுத்த வேண்டுகோளின் பேரில்இதுமூடப்பட்டது ஏற்கனவே தெரிந்ததே.

நேற்று முன்தினம் காலை 8.00 மணிக்கு மீண்டும் ஆலை திறக்கப்பட்ட போதும் உற்பத்தி நடவடிக்கைகள் இடம் பெறவில்லை.

கடந்த 3 ஆம் திகதி முதல் உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இயந்திர ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் கடமைக்குச் சமுகம்தரவில்லை.

பணியில் நிறுத்தப்பட்ட 6 ஊழியர்களுடனும், ஏனைய சமூகமளித்த ஊழியர்களுடனும் நேற்றுமுன்தினம்காலை மாவட்ட தொழில் பிரதி ஆணையாளர் பேச்சு நடத்தியதாக தெரியவருகிறது. (சு-60)

## வருடாந்த உற்சவம்

[யாழ்ப்பாணம்]

யாழ். வண்ணை மணிக்கூட்டு வீதி அருள்மிகு அரசடி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்துபத்து நாட்கள் நடை பெறவுள்ளது. [செ]

# இராசி பலன்

01-9-2000
(ஆவணி 16, வெள்ளி)

திருதியை
ந.ப. 12.09 வரை
அத்தம்- பி ப 4.34.வரை

இராகுகாலம்
10-35- 12.05
சுபநேரம் 6.05-7-35

விநாயகர் சதுர்த்தி விரதம்

**மேடம்**
மனத்திற்கினிய நிகழ்வு உஷ்ணரோகம், நண்பர்கள் பகை, காரிய வெற்றி.

**இடபம்**
குடும்பக்கவலை, சிறுவியாதி பொருள் வரவு.

**மிதுனம்**
உறவினர்களால் நம்பிக்கைக்கேடு. செய்தொழில், மேன்மை, அலைச்சல்.

**கடகம்**
பணவரவு, சந்தோஷமான செய்தி, பிரயாணம், சகோதரர் உறவு.

**சிங்கம்**
தேவையற்றவிவாதம், காரியத்தாமதம், பணச்செலவு.

**கன்னி**
ஆரோக்கியமான நிலை காரியநட்டம், சுமாரான வருமானம்.

**துலாம்**
அலைச்சலான பிரயாணம் முயற்சிதாமதம், எதிர்பாராத சில நன்மை, பணச் செலவு.

**விருச்சிகம்**
பணவரவு, சுவாரஸ்யம் எடுத்த காரியம் வெற்றி, உல்லாசம்.

**தனுசு**
தொழில் அதிகாரம், மனக்குழப்பம், பிரயாணம் புதிய முயற்சி பற்றிய சிந்தனை.

**மகரம்**
பயத்த சுபாவம், உடல் நலம் பாதிப்பு, சினேகிதர்களால் மனஸ்தாபம்.

**கும்பம்**
பிரயாண பயம், விபத்துக்கள், பெரியோரால் கௌரவிக்கப்படல், காரியத்தாமதம்.

**மீனம்**
பிரயாணம், விருந்துண்ணல், பணவரவு காரிய வெற்றி.

[பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது]

வளவன்

# பொதுஅறிவுவினாக்கள்

## இல. 20 தொகுப்பு : யூட்

பின்வருவனவற்றை கண்டுபிடித்தவர்கள் யார்?

1) மின்காந்தம்————=————
2) நீராவிக்கப்பல்——————————
3) இயந்திரத் தறி——————————
4) ரைக்ரர்——————————
5) சைக்கிள்——————————

) மிகக்கூடுதலான துணைக்கோள்கள் உடைய கோள் எது?
7) யுரேனசை கண்டுபிடித்தவர் யார்?
8) இந்தியா அனுப்பிய இரண்டாவது துணைக்கோள் எது?
9) காற்றின் நகரம் என அழைக்கப்படும் நாடு எது?
10) ஐரோப்பாவின் காப்பகம் எது?
11) உலக கல்வி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
2) அமெரிக்காவின் மக்கள் பிரதிநிதிகள் கூடும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?
13) முதன்முதலாக கால நிலையை அறிய அமெரிக்காவினால் அனுப்பப்பட்ட செயற்கைக்கோள் எது?
14) நகல் எடுக்கும் இயந்திரம் எத்தனையாம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
15) பலஸ்தீன அதிபர் பெயர் என்ன?
16) பொற்கதவு நகரம் என்று அழைக்கப்படும் நாடு எது?
17) இலங்கையில் கல்வியியல் கல்லூரிகள் தொடங்கிய ஆண்டு?
18) அமெரிக்காவின் சுதந்திரதினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
19) ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப்பொறுப்பை தற்போது கொண்டுள்ள நாடு எது?
20) கி. பி. 20 ஆம் நூற்றாண்டில் ஸ்பெயினில் நிறுவப்பட்ட நவீன நாடக அரங்கின் பெயர் என்ன?
21) உலகில் முதலாவதாக கண்டறியப்பட்ட விற்றமின்எது?
22) இலங்கையில் பாராளுமன்றத்தை நிறுவ உதவி வழங்கிய நாடு எது?
23) இலங்கையில் முதலாவது சோதனைக் குழாய் குழந்தை எப்போது பிறந்தது?
24) முதலாவது செயற்கை இதயமாற்று சிகிச்சை எத்தனையாம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது?
25) இலங்கையின் முதலாவது காற்றலையால் மின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ள இடம் எது?
26) உலக சமாதான தினம் எப்போது?
27) நுணுக்குக் காட்டியை கண்டுபிடித்தவர் யார்?
28) மாபிளின் மூலப்பொருட்கள் எவை?
29) வல்கனைஸ் ரப்பர் கண்டு பிடித்தவர் யார்?
30) நைலோனின் தந்தை யார்?
31) தங்க நகைகளில் தங்கத்தோடு சேர்க்கப்படும் உலோகம் எது?
32) சோடாத்தண்ணீரின் இரசாயன பெயர் எது?
33) மக்சசாய் விருது எந்நாட்டில் வழங்கப்படுகிறது?
34) இன்ரர் நெட்ரை கண்டுபிடித்தவர் யார்?
35) ஏலக்காய் தாவரத்தின் எப்பகுதி ஆகும்?
36) 188 நாடுகளின் தேசிய கீதத்தை பாடி சாதனை படைத்தவர் யார்?
37) வெள்ளை ஆமைகள் காணப்படும் நாடு எது?
38) உலகிலே மிக நீளமான பாலம் எது?
39) கம்போடியாவின் தலை நகரம் எது?
40) யுராசி பார்க் என்ற படத்தின் இயக்குநர் யார்?

குறிப்பு:-

இதற்கான விடைகளை 07 - 09 - 2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்.

**அறிவியல் பகுதி வினா இல. 20**

"வலம்புரி"
இல. 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................

சொந்த முகவரி: ..............................

கற்கும் பாடசாலை: ..............................

மாணவர் கையொப்பம்: ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்;

பல, நோக்கு கூட்டுறவு சங்கங்கள்

# நிவாரண விநியோகத்தில் மட்டும் தங்கியிருத்தல் கூடாது

### கூட்டுறவு ஆணையாளர் சுப்பிரமணிய சர்மா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வெறுமனே நிவாரண விநியோகத்தில் மட்டும் தங்கியிராது போட்டிப் பொருளாதார நிலமையில் கூட்டுறவுச் சங்கங்கள் போட்டி போட்டு முன்னேற வேண்டும். சங்கங்களின் முன்னேற்றத்தில் சங்க ஊழியர், அங்கத்தவர்கள் முகாமை ஆகிய தரப்பினர் தமது பங்களிப்பினைச் செய்ய வேண்டும்.

திருகோணமலைப் பகுதியில் உள்ள சங்கங்கள் பெரும்பாலும் உழைத்து முன்னேறி தமது சொந்தக் காலில் நிற்கின்றன. இதனால் அவர்களுக்கு புதிய சம்பளத்திட்டத்தை வழங்க முடிகிறது. என்று வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ் சுப்பிரமணிய சர்மா தெரிவித்துளார்.

அவர்மேலும் கூறியதாவது,

1987 ஆம் ஆண்டில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் சங்கங்களுக்கு ஏற்பட்ட பாரிய இழப்புகளுக்கு இலங்கை - இந்திய ஒப்பந்தம் காரணமாக புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி பல்வேறு வகைப்பட்ட உதவிகளை வழங்கியுள்ளது. இந்த அடிப்படையில் இக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்குமா என்பது சந்தேகத்திற்குரிய விடயமாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கென புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதால் அதன்மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் நட்டங்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆளணித் திரட்டுக்கு மேலாக பணியாளர்களைவைத்திருப்பதால் புதிய சம்பளத்திட்டத்தை அமுல் படுத்த முடியாது கஷ்டப்படுவதாக அறிய முடிகிறது. ஆளணி தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் ஏற்கனவே சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஆளணி தொடர்பாக சகல நிபந்தனைகள் உட்பட சகல விடயங்களும் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் தான் ஆளணி நியமிக்கப்பட வேண்டும்.

(சு)

# வர்த்தகசங்க சட்டவிதிகளை மீறுவோர்மீது கடும் நடவடிக்கை

### - வர்த்தக சங்கம் எச்சரிக்கை

(ஈச்சமோட்டை)

வர்த்தகர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் கடைகளைப் பூட்டி, தொழிலாளர்களுக்கு பூரணமாக விடுமுறையை வழங்கவேண்டும்என வலி. மேற்குவர்த்தக சங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

தனியார் வர்த்தக நிலையங்களில் மண்ணெண்ணெய் தவிர்ந்த, பெற்றோல், டீசல் ஓயில் போன்றவை விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்விதிகளை மீறும்வர்த்தகர்கள்மீது கடுமையானநீதி மன்றத்தண்டனை விதிக்கப்படும்எனமேற்படி சங்கம்தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் சங்கத்தின் சட்டவிதிகளை சிலவர்த்தகநிறுவனங்கள் மீறியமையினாலேயே இக்கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இச்சங்கம் தெரிவித்துள்ளது. (செ-59)

# பொது அறிவு வினா இல. 19

அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

1) ச. அஜன், நல்லூர்
2) வே. செந்தூரன், மானிப்பாய்
3) கே. பிரியவதனா, நெல்லியடி
4) வே. ஐங்கரன், சுன்னாகம்
5) ச. ஹபிலன், வட்டுக்கோட்டை
6) செ. வசந்தகுமாரி, நல்லூர்
7) இ. சிவசங்கர், புத்தூர்
8) ம. எமர்சன், மானிப்பாய்
9) கி. சிவானந்தம், திருநெல்வேலி
10) செ. ஜெரீம் நிரோஷன், வட்டுக்கோட்டை
12) கே. பிரியதர்ஷினி, சுதுமலை
13) பா. கருணாகரன், சித்தங்கேணி

# பொது அறிவு வினா இல. 19 இற்கான விடைகள்

1) நைரோபி
2) டிரான்
3) புக்காரஸ்ட்
4) ஸோபியா
5) ஜகார்தா
6) மார்க்
7) வோன்
8) க்ரேன்
9) டொலர்
10) லிறா
11) ஒக்ரோபர் - 31
12) கொரியா
13) 13 கோடுகள்
14) பயனியர் - 10 (USA)
15] அப்பேலோ ஸோயூஸ்
16] ஸில்கோம் III
17] கே. ஆர். நாராயணன்
18] நவம்பர் - 8
19] பாங்ஒவ் ஜப்பான்
20] காஸ்ட்
21] இங்கிலாந்து
22) 1863
23] 1990 ல்
24] ஒலுசுகன் ஒபசன்ஜோ
25] லூயிபாஸ்ரர்
26] 1960
27) யூக்கலிப்ட்ஸ்
28] ஊதாண்ட்
29] செல்டெல்
30] 1985
31] மலேசியா
32] பெரஸ் சல்பேட்
33) ஹாரஸ்சார்ட்
34) ஜேர்மனி
35] டார்வின்
36] ஆறுமுகநாவலர்
37] 1802
38] 1960
39] ஜெனிவா
40] நோர்வே

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

நாவற்குழி மற்றும் மணலாற்றுப் பகுதிகளில் கடந்த செவ்வாயன்று இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின் போது.

★ கப்டன் சாருணி மயில்வாகனம் மேகலட்சுமி (மட்டக்களப்பு மாவட்டம்)
★ 2 ஆம் லெப். யாழினியன் இன்னத்துரை புலேந்திரன் (மட்டக்களப்பு மாவட்டம்)

ஆகிய போராளிகள் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ந)

# தொடர்புகொள்ள வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

1996 ல் வடபகுதியில் இராணுவத்தால் கைதாகி காணாமற் போன நபர் இம்மானுவல் மரியஜெயசிலன் தொடர்பான ஆட்கொணர்வு மனுத் தாக்கல் வழக்கு விடையமாக கைதடி நாவற்குழியில்வசித்து வந்த திருமதி எம். வி. பூமணி இம்மானுவேல் மனித கௌரவத்திற்கான மன்றம் யாழ்ப்பாணம் செயலகத்துக்கு உடனடியாக சமூகம் தருமாறு அதன் இணைப்பாளர் ஐ. சிவராசா தெரிவித்துள்ளார். (சு)

# ஹெலியிலிருந்து தாக்குதல்

[வடமராட்சி]

நாகர் கோவிலை அண்டிய பகுதியில்சில தினங்களின்முன் இரவுஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டு ஹெலிகள் கடும் தாக்குதல் நடத்திய போதிலும் சேதங்கள் ஏற்பட்டதாக தகவல் இல்லை. [க-43]

# கொக்குவிலில் திருட்டு

கொக்குவில் பகுதியில் யன்னலை உடைத்து வீட்டினுள் சென்ற திருடர்கள் வானொலிப் பெட்டி ஒன்றை திருடிச் சென்றுள்ளனர்.

கொக்குவில் மேற்கில் பிடாரி அம்மன் கோவில் பகுதியில் சி. பத்மநாதன் என்பவரது வீட்டிலேயே இத் துணிகர திருட்டு இடம்பெற்றுள்ளது.

அரியாலையில் இருந்து இடம் பெயர்ந்தோர் இவ் வீட்டில் தற்காலிகமாக தங்கியிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

கொக்குவில் பகுதியில் அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு, கேணியடி அருள்மிகு ஸ்ரீகாளியம்பாள் ஆலய பஞ்ச குண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக் கிழமை நடை பெறவுள்ளது. (செ)

### இன்று ஒரு தகவல்

# இசையே இன்னுயிர்களை மகிழ்விக்கும் மருந்து

இசையே ஒருமருந்துஎன்று சொன்னால் நீங்க நம்புவீர்களா? நம்பமாட்டீர்கள். சொல்லுறவர்களை சந்தேகமா பார்ப்பீர்கள்.

இசைவிருந்து என்றுசொல்வதுதான் எங்கள்பழக்கம். இசைமருந்து என்று சொன்னாலும் அதுலஒன்றும் தப்பில்லை.

இசையென்றா. ஏதோ ஒருத்தர்பாட இன்னொருத்தர் தலையாட்டிவிட்டு போகிற சமாச்சாரம் மட்டுமில்லை. அதில் நிறையவிஷயம்இருக்கு.

காஞ்சிப்பண் பாடினால் புண்கள் எல்லாம் சீக்கிரம் ஆறிப்போய்விடும். அப்படி என்று சங்ககாலபுலவர்கள் பாடிஇருக்கிறார்கள்.

அவர்களுக்கு என்ன? ஏதோ ஒரு எண்ணத்தில்அப்படிபாடிவிட்டு போயிட்டார்கள்என்று நினைக்கலாம்.

ஆனால் இப்போ சில டாக்டர்கள் சொல்லுறதை பார்த்தால் அவர்கள் எல்லாம் அனுபவத்தைத்தான் பாட்டில சொல்லியிருக்கிறார்கள் போல இருக்கு.

பம்பாயில் ஒரு டாக்டர் ராமகாந்த் கே. கெனிஅப்படி என்று பெயர் இசை மூலமா இதய நோயை குணப்படுத்தி விடுவார். அப்படியென்று சொல்கிறார்.

சும்மா சொல்லவில்லை விஞ்ஞானரீதியா சொல்கிறார் இசை மூலமா அவர் சில இதய நோயாளிகளை குணப்படுத்தியிருக்கிறார். அது மட்டுமில்லை சில ஆஸ்துமா நோயாளிகளையும் குணப்படுத்தியிருக்கிறார்கள்.

அப்படி அவருக்கு குணப்படுத்தின நோயாளிகளை நிருபர்கள் இடம் காட்டினாராம்.

முற்றிய நிலையிலே இருக்கிற காசநோயைக் கூட இசை மூலமாகுணப் படுத்த முடியும் என்பது நிரூபணமாயிருக்கு அப்படியென்று அவர் சொன்னார்.

பொதுவா நமக்கு வருகிற வியாதிகளுக்கும் மனதுக்கும் ஏதோ ஒருசம்பந்தம் இருக்கு. இசையை கேட்கும் போது மனது இலகுவாகும். மனது இதமா இருக்கு. அதனால வியாதி குணமாகிறதுக்கும் அது காரணமா இருக்கும்.

கடவுளை வணங்கும்போது கண்ணை மூடிவிட்டு சிலபேர் பாடுகிறார்கள் எதுக்காக? சுலபமா புரிந்து கொள்ளக் கூடிய ஒரு காரணம்:

யானைக்கு மதம் பிடித்துப் போவதில்லை. அப்படிப் பட்ட மதம் பிடிச்ச யானை கூட இசைக்கு அடங்கி விடும் அப்படி என்றுதோன்றுகிறது.

ஒரு பெரிய மலை. அங்கே மதம் கொண்ட யானை ஒன்று பிளிறிக் கொண்டு ஓடி வருகிறது.

அது ஏன் ஓடி வருகிறது தெரியுமா? தினைப்புலத்துல உள்ள தினைக்கதிரை தின்பதற்காக. அந்த நேரத்துல தினைப்புலத்துக்குக் காவல் காத்துக் கொண்டு ஒரு சின்னப் பெண் நின்று கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் பக்கத்தில் உள்ள சுனை நீரில் நீராடி விட்டு வந்து நிற்கிறாள். நீளமான கூந்தல் ஈரமாய் இருக்கின்றது. அதனாலே அதை கோதிக் கொண்டுஇருந்தாள்.

அந்த சிறு பெண் தன்னோட கூந்தலைக் கோதிக் கொண்டு ரொம்ப இனிமையா குறிஞ்சிப் பண்ணாகிய தமிழ் இசையை பாடிக் கொண்டு தலை முடியைக் காய வைச்சிக் கொண்டிருந்தாள்.

அங்கே ஓடி வந்த யானை இந்த இசையைக் கேட்டது. அவ்வளவு தான். அப்படியே அசையாமல்நின்றது. தினைக் கதிரை தின்ன வந்ததையே மறந்திட்டுது.

பசியெல்லாம் மறந்து இசையிலே மயங்கி நிற்கிறது யானை.

அகநானூறுலில் ஒரு பாட்டு ஒலியல் வார் மயில் உளரிணள் கொடிச்சி குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது, படா அப்பைங்கள் பாடு பெற்றொய் என மறம் புகல் மழகளிறு உறங்கும்.

மயிலும்- பாம்பும் பகை
யானையும் - சிங்கம் பகை
மானும் - புலியும் பகை

ஆனால்புல்லாங்குழல் இசையைக் கேட்டுவிட்டு இதுவெல்லாம் பகை மறந்து கூடியிருந்து மகிழ்ச்சியாக இருந்ததாக பெரிய புராணத்தில் ஒரு பாட்டு இருக்கு பகைமையையே மறந்துட வைத்துவிட்டார்கள் பாருங்களேன். இசைக்கு உள்ளசக்திஎப்படிப் பட்டது என்று

ஒருகதை தெரியுமா உங்க

## விநாயகர் சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

தலையாழி அருள் மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை விநாயகர் சதுர்த்தி விழாவும், 108 சங்காபிஷேகமும், மாலை விநாயகர் வீதியுலா வரும் நிகழ்வும்இடம் பெறவுள்ளது.

(செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை நீராவியடி கடையிற் சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமைஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரெண்டு நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

(செ)

## மணவாளக் கோலம்

[ஊர்காவற்றுறை]

புளியங்கூடல் செருத்தனைப்பதி அருள்மிகு மகாமாரி அம்மன் ஆலய மணவாளக் கோல விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

(செ-75)

## நூலகவாரம்

(அரியாலை)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி நூலகத்தை விருத்தி செய்யும் நோக்குடன் நூலக வாரம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை இந்நூலக வாரம் இடம் பெற உள்ளது.

(செ-106)

## விசர் நாய்களின் தொல்லை அதிகரிப்பு

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளிப் பகுதியில் விசர்நாய்களின் தொல்லைகள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன.

நேற்று முன்தினம் பழைய பூங்கா வீதியில் இருவரும், குருசோ வீதியில் ஒருவரும், மத்தியூஸ் வீதியில் இருவரும், ஈச்சமோட்டை வீதியில் ஒருவருமாக மொத்தம் ஆறு பேர் ஒரே நாளில் விசர்நாய் கடிக்கு ஆளாகி தற்பொழுது யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேற்படி பகுதிகளில்இருந்து மக்கள் இடம்பெயர்ந்த பொழுது தாம் வளர்த்த நாய்களைக் கைவிட்டுச் சென்றதே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(சு)

## புனரமைப்புக்கு

## குப்பையாமோ எதிர்காலம்?

நிலவுடன் விழித்திருந்த நீளமான இரவுகளில்
கலகம் செய்த மனம் கண்களைத் தண்டிக்கும்
உலகத்தின் இருளின் பின் இதயத்தின் மென்சுவரை
சில விரல்கள் கீறிச் சித்திரவதை புரியும்

வெட்டுப்புள்ளியரக்கன் விட்டுச் சென்ற வரங்கள்
நட்ட நடு வீதியும் நாய் படாதபாடும் தான்
கட்ட விழ்ந்தமாடெனவும் கல்லாத பேதையென்றும்
மற்றவர்கள் சொல்லக்கேட்டுமரத்துப் போனதுள்ளமடா

''பல்கலைக்கழகம் போய் பட்டதாரியாகிடுவோம்,
கல்வியெனும் கடலுக்குக்கலங்கரை நாமாவோம்''-இது
எல்லாம் கனவென்று எள்ளி நகையாடும் மனம்
கொல்லாமல் கொல்லுதடா, குளமெனக்கண்ணாகுதடா

வெறித்தவொரு பார்வையும், விரக்தியீன்ற தாடியும்
நெரித்தவிரு புருவமும், நெற்றியில்வீழ்ந்த கேள்வியும்
பொறித்துச் சென்றதிந்த பொல்லாத வெட்டுப்புள்ளி
குறிக்கோளேதுமற்ற குப்பையாமோ எதிர்காலம்?

தேனுகா. கருணாநிதி

மட்டக்களப்பு தேர்தலில் போட்டியிட

# மூன்றாவது அணியும் கட்டுப் பணம் செலுத்தியது

[மட்டக்களப்பு]

எதிர் வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 3ஆவது சுயேட்சைக் குழு மட்டக்களப்புத் தேர்தல் திணைக்களத்தில் கட்டுப் பணம் செலுத்தியது.

மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் ஈரோஸ் உறுப்பினர் சின்னத்தம்பி செல்வம் சாண்டோ தலைமையிலான குழுவும் ஏறாவூரைச் சேர்ந்த முகம்மது பஸீர் தலைமையிலான குழுவும் கட்டுப்பணம் செலுத்தியதாக உதவித் தேர்தல் தெரிவு அத்தாட்சி அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஈ. பி. ஆர். எல். எவ். வரதர் அணி ஆர். துரைரட்ணம் தலைமையில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(சு-60)

ஊர்காவற்றுறையில்

# கடற்றொழிலாளர் கூ. சங்கத்தினரால் மக்கள் கடை திறந்துவைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை தம்பாட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பொது மக்கள் நலனைக் கருத்திற் கொண்டு மக்கள் கடை ஒன்றை அமைத்துள்ளது.

தரமான பொருட்கள் நியாய விலையிலும், தட்டுப்பாடின்றியும் பொதுமக்களுக்கு கிடைப்பதற்காக மேற்படி கடையை அமைத்துள்ளதாக தம்பாட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தின்றனர்.

இம் மக்கள் கடையில் அனைத்துப் பொருட்களும் எந்த நேரத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

(செ-75)

# மேலதிக மாகாண கல்வி பணிமனைக்கு வெகு விரைவில் சொகுசு வாகனம்

## கல்வி அமைச்சு செயலர் உறுதி

(யாழ்ப்பாணம்)

மேலதிக மாகாண கல்விப் பணிமனைக்கு வெகு விரை

களையும். தொலைபேசி வசதிகளையும் செய்து தருவ

கண்ணை மூடிவிட்டு சிலபேர் பாடுகிறார்கள் எதுக்காக?

கடவுள் இவர் பாட்டை ரொம்ப ரசித்துக் கேட்கிறார்கள்?

இவர்பாடுகிறது இவருக்கே ஒரு மருந்தாகுது.

அதுதான் காரணம். எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி. அவுங்க வேண்டுதலை, இசைரூபமாத் தானே சொல்லுகிறார்கள்.

கந்த சஷ்டி கவசம் கந்தரனுபூதி, விஷ்ணு சகஸ்ரநாமம், சுப்ரபாதம். இப்படி எல்லாம் சொல்றது எதுக்காக?

இதுக்கெல்லாம் ஆன்மீக காரணங்கள் எதுவா இருந்தாலும் இதயத்திற்கு இதமாயிருக்கிறது. எல்லோருக்கும் ஒருகதை தெரியுமா உங்களுக்கு பத்திரிகையிலே பார்த்தேன்.

ஒரு சங்கீத வித்துவானைப் பற்றி இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருத்தர் சொல்கிறார் அதோ இருக்கிறாரே அந்த வித்துவான் பாடினால் நாள் பூராகேட்டு கிட்டிருக்கலாம். அப்படியென்றார். அவ்வளவு நல்லா பாடுவாரா? என்று கேட்டார்; இன்னொருத்தர் அதுக்கு இவர் அப்படியில்ல அவர் ஆரம்பித்தார் அவ்வளவு சீக்கிரத்தில் முடிக்கமாட்டார். அதனால் அப்படி சொன்னேன் என்றார்.

தெங்கச்சி சுவாமிநாதன்

## புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை புளியங்கூடல் சின்னமடுத்தேவாலயப் புனரமைப்பு பணிக்காக வடக்கு கிழக்கு மாகாண புனரமைப்பு புனர்வாழ்வு அதிகாரசபையினால்நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தேவாலயம் பல வருடங்களாக புனரமைக்கப் படாமல் இருந்தது. பலயாத்திரிகர் பலர் வந்து தங்கும் இத்தேவாலய தங்குமிடம் மலசல கூடங்கள் என்பன பல வருடங்களின் பின்னர் தற்போது புதிதாக அமைக்கப் பட்டுவருவதாய் தெரிவிக்கப் படுகிறது. (த-75)

பணிமனைக்கு வெகுவிரைவில் வாகனம் ஒன்று கிடைக்கவுள்ளது. இதற்கான உறுதிமொழி ஒன்றை மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் வைத்து மேற்படி பணிமனை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

அத்துடன தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் இப் பணிமனையின் கட்டடத்திற்கான வாடகைச் செலவு தாக உறுதியளித்ததோடு மேலதிக மாகாண கல்விப் பணிமனைக்கு என்று ஒரு கணனியும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி பணிமனை உத்தியோகத்தர் தம் காரியாலய தேவைகளை பூர்த்திசெய்யக் கோரி அடையாள வேலை நிறுத்தம் மேற்கொண்டது தெரிந்ததே. (க-12)

# இலங்கை கடற்பரப்பில் கைதாகிய மூன்று இந்திய மீனவர்களையும் தாய் நாட்டிற்கு அனுப்ப முயற்சி

(யாழ்ப்பாணம்)

இந்தியமீனவர் மூவரியாழ். நீதி மன்றத்தால் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எசேக்கு முத்து அழகேசன், ஜேசுதாசன் இருதயராஜா, சூசைதாசன் திருவேந்திரம் ஆகியோர் இலங்கைக் கடற்பரப்பில் காணப்பட்டார்கள் என்ற குற்றத்தின் பேரில் இலங்கைகடற்படையினரால் இவ்வருடம் மார்ச் மாதம் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறை முகாமில்தடுக்கப் பட்டிருந்தனர்.

மேற்படி நபர்கள் தொடர்பாக சட்டமா அதிபருக்கு தெரியப்படுத்தியிருந்து விசாரணைகள் மேற்கொண்ட போதுகுற்றத்திற்கான ஆதாரங்கள இலலாத படியால் இவர்கள் மீதான வழக்கு தொடரத் தேவை இல்லை எனவும் இவர்களை தாய் நாட்டிற்கு அனுப்பலாம் எனவும் கடந்த ஜலைமாதத்தில் சட்டமா அதிபரினால் பணிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (த-12)

# சிறுபராயம்முதல் வளர்த்தமகளை தகாதமுறையில் வழிநடத்திய மூதாட்டி நீதிமன்றில் ஆஜர்

சிறுபராயம்முதல் தத்தெடுத்து வளர்த்தமகளை தகாதமுறையில் வழிநடத்திய மூதாட்டி கடந்த திங்கட்கிழமை யாழ். நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய தரம் ஒன்பதில் கல்வி பயிலும்மாணவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய மூதாட்டி யாழ். சிறையில் வைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் பிணையில்செல்ல யாழ். நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது; (சு-18)

## அஸ்டோத்ர சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை மேற்கு நிற்சாமம் அருள் மிகு ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேக தின மணவாளக் கோல அஸ்டோத்ரசங்கா பிஷேகம் இன்று வெள்ளிக் கிழமை காலைநடைபெறவுள்ளது

நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும். (செ)

யாழ்ப்பாணம்



### தொடர்ந்து ஆறு தினங்களாக
## காரில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பர்மிய முக்கியஸ்தரை விடுவிக்கவும்
### ஐ. நா. செயலர் கோரிக்கை

(ரங்கூன்)

மியான்மார் தலைநகர் ரங்கூனில் காரினுள் ஆறு நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஜனநாயக ஆதரவு தலைவர் ஹம்சான் சுகியை உடன் விடுதலை செய்யவும்.

மேற் கண்டவாறு ஐ. நா. செயலர் கோபி அனன் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ந்து 6 நாட்களாக காரினுள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர் கூட்டமொன்றிற்கு செல்லும்போது தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

நோபல் பரிசு பெற்ற ஹம்சான் சுகு சிதான் பயணத்தைத் தொடர்வதற்கு அனுமதிக்கும் படி கோரியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (து-க)

## கொங்கோ நாட்டைக் காக்க சிம்பாபேக்கு பல லட்சம் செலவு

கொங்கோ நாட்டுப் பாதுகாப்புக்காக சிம்பாபே அரசாங்கம் 200 மில்லியன் டொலர் செலவிடுவதாக வெளி விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ருவாண்டா, உகண்டா நாடுகளின் தீவிரவாதிகள் கொங்கோவுக்குள் ஊடுருவ முயற்சிப்பதால் சிம்பாவே அரசாங்கம் தனது துருப்புக்களை கொங்கோவில் எல்லைப் புறங்களில் பாதுகாப்புக்காக அனுப்பியுள்ளது.

நாளாந்தம் சிம்பாவே அரசாங்கத்துக்கு பல்லாயிரம் டொலர்கள் செலவாகின்றன என்றும் சிம்பாவேயின் பொருளாதாரம் குறைந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

## பாகிஸ்தானிய மூன்று படகுகள் இந்தியாவில் கைப்பற்றப்பட்டது

(குஜராத்)

பாகிஸ்தானைச் சேர்ந்த மூன்று படகுகள் குஜராத் கடற் பிரதேசத்தில் வைத்து இந்திய கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட படகுகளில் சுமார் 33 பேர் காணப்பட்டனர் என்றும் கோடீஸ்வரத்திலிருந்து 24 மைல் கடல் தூரத்தில் வைத்து மேற்படி படகுகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண மீன்பிடிக்கும் கருவிகள் மற்றும் சம்பந்தப்பட்டோரின் அடையாள அட்டைகள், கடவுச் சீட்டுக்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்டோர் குறித்த விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (து)

# பங்களாதேஷில் புயலில் சிக்கிய 60 பேர் படகுடன் மூழ்கினர்

(டாக்கா)

பங்களாதேஷில் ஏற்பட்ட புயலாலும் மழையாலும் 60 மீனவர்கள் கடலில் மூழ்கி விட்டனர்.

7 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 112 மீனவர்கள் அங்கு ஏற்பட்ட கடும் புயல் மற்றும் மழையில் சிக்குண்டு மூழ்கியிருக்கிறார்கள் என்று மீனவர்களும் பொலிஸாரும் தெரிவித்தனர்.

சிட்டகாங் போன்ற பகுதிகளில் பலத்த வெள்ளமும் காற்றும் வீசியது. இதனால் தாழ்வுப்பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. மக்கள் உயர்வான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். கடலில் மூழ்கிய 60 மீனவர்களையும் படகுகளையும் தேடுவதில் பொலிஸாரும் மீனவ சுழியோடிகளும் ஈடுபட்டு வருகின்றனர். (து)

## பிரதமரின் விஜயம் ஒத்திவைப்பு

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் வாஜ்பாய் அமெரிக்கா புறப்படவிருந்த விஜயம் இரண்டு தினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டதாக பிரதமர் அலுவலகம் நேற்று தெரிவித்தது.

அவருக்கு ஏற்பட்ட மூட்டு வலிகாரணமாக இவ்விஜயம் ஒத்திவைக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 7 ஆம் திகதி பிரதமர் வாஜ்பாய் அமெரிக்கா புறப்படவிருந்தது குறிப்பிடத்தக்கது. (து)

## உலக தரிசன அறிவுப்போட்டி - 01
### வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரம்

முதலாம் பரிசு:

குமாரவடிவேல் நிருத்தன்
350/1, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு:

திருமதி சிவானந்தம் குமராம்பிகை
'திருவருள்' அரசடி,
சங்கானை.

மூன்றாம் பரிசு:

உமாகாந் டிலக்ஷிகா
444, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப் பெறுவோர்:

குமாரவடிவேல் குருபரன் 350/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

சண்முகசுந்தரம் யமுனா 'யமுனா இல்லம்' சங்கானை.

குலசேகரம் தாட்சாயனி திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி.

சண்முகசுந்தரம் கங்கா அரசடி வைரவர் கோவிலடி, சங்கானை.

உ. ஜெயரோஸ் திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்.

சுகந்தி குணரட்ணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

அ. சுபாங்கி தாதியர் பயிற்சிப் பாடசாலை யாழ்ப்பாணம்.

சதாசிவம் சண்முகசுந்தரம் அரசடி வைரவர் கோவிலடி, சங்கானை.

அ. துவாரகா தாதியர் பயிற்சிப் பாடசாலை, யாழ்ப்பாணம்.

ஜி. உமாகாந் 444, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[மிகுதி நாளை தொடரும்]

உலக தரிசன அறிவுப் போட்டி 01ல் பல நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டதுடன், அநேகமானோர் சரியான விடைகளை எழுதியிருந்ததனால் குலுக்கல் முறை மூலம் பரிசிற்குரியவர்களை நாம் தெரிந்தெடுத்துக் கொண்டோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ இப்போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் 'வலம்புரிக் குடும்பத்தினரின்' சார்பில் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ இப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் 03-09-2000 அன்று வலம்புரிக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும்.

வெற்றி பெற்றவர்களுக்குரிய பரிசில்களை வழங்குபவர்கள்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி,

## வீரப்பனுடன் பேச்சு நடத்த விரைவில் அனுமதி கிடைக்கும்
### நக்கீரன் ஆசிரியர் நம்பிக்கை

(சென்னை)

சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனுடன் பேச்சு நடத்துவதற்கான அனுமதி தனக்கு கிடைத்துள்ளதாக நக்கீரன் ஆசிரியர் கோபால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; வீரப்பனுடன் பேச்சுநடத்திய கன்னடநடிகர் ராஜ்குமாரின் விடுதலை தொடர்பாக சாதுரியமான வழிகளை கையாள முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

எனினும் சிறையில் உள்ள மணிகண்டன் விவகாரத்தால் நடிகர் ராஜ்குமாரின் விடுதலை மேலும் ஒரு சிலவாரம் தாமதிக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே திருச்சி தேசிய பாதுகாப்பு சிறைக் கூடத்திற்குள் கைதியாக உள்ள மணிகண்டனை காட்டிற்கு அனுப்பினால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என அவரது தந்தை சென்னை உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமை ஏற்கனவே தெரிந்ததே.

விடுதலை செய்யப்பட வேண்டிய கைதிகள் பட்டியலில் மணிகண்டனின் பெயர்

வீரப்பனுடன் பேச்சுநடத்திய கன்னடநடிகர் ராஜ்குமாரின்

...விக்கப்படுகிறது.

ஏற்கனவே திருச்சி தேசிய

## வட தென்கொரியாக்கள் இணைந்தன பஸ் போக்குவரத்திற்கும் ஏற்பாடு

(லண்டன்)

வடக்கு மற்றும் தெற்கு கொரியாக்கள் இரண்டும் தங்களுக்குள் பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்தவும் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளவும் இருநாடுகளும் இணங்கியுள்ளன.

போங்யோ நகரத்தில் நடந்த இரு நாட்டு உள்துறை அமைச்சர்களின் பேச்சுவார்த்தையை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மேலும் இதே கூட்டத்தின் இருநாடுகளுக் கிடையேயான பஸ் போக்கு வரத்து, ரயில் போக்கு வரத்துக்களை ஆரம்பிப்பது பற்றி முடிவு எடுக்கப்பட்டது: (து)

## எய்ட்ஸ் கலந்த இரத்தம் இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டது

### முற்றாகமறுக்கிறது மத்தியஅரசு

(கேப்ரவுண்)

தென்னாபிரிக்காவிலிருந்து இரத்தத்துடன் எய்ட்ஸ் இருமிகள் கொண்டுரப்படவில்லை என்று இந்திய மத்திய அரசு மறுத்துள்ளது.

சில பத்திரிகைகளில் தென்னாபிரிக்காவிலிருந்து இரத்தம் இறக்குமதி செய்யப்பட்டதென்றும் அதில் எய்ட்ஸ் தொற்றுக் கிருமிகளும் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுவிட்டனவென்றும் வந்த செய்திகளை அடுத்தே அரசு இந்த மறுத்தல் அறிவித்தலை விடுத்திருக்கிறது.

மத்திய அரசு அறிவித்தலில் இந்தியாவிற்குள்எந்தசந்தர்ப்பத்திலும் தென்னாபிரிக்காவிலிருந்து இரத்தம் கொண்டுவரப்படவில்லை என்றும் எந்த நிறுவனத்துக்காயினும் இரத்த இறக்குமதியோ இரத்தம் சம்பந்தப் பட்ட பொருட்கள் இறக்குமதிக்கு உரிமமோ வழங்கப்பட வில்லையென்றும் கூறப்பட்டுள்ளது. (து)

விடுதலை செய்யப்பட வேண்டிய கைதிகள் பட்டியலில் மணிகண்டனின் பெயர் உள்ளதும்குறிப்பிடத்தக்கது: [க]

பூபாலசிங்கம் புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## இந்தோனேசிய அதிபர் வாஹிட் ஊழல் மோசடியில் சிக்கினார்

### பதவி இழக்கும் அபாயமும் உண்டு

(ஜகார்த்தா)

இந்தோனேசிய அதிபர் அப்துல் ரகுமான் வாஹிட் மீது மோசடிக் குற்றச் சாட்டு தொடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கப் பணத்தில் 40 இலட்சம் காணாமல்போனது பற்றியும் புறூனே மன்னர் சுல்தானிடமிருந்து அன்பளிப்பாக 20 இலட்சம் பெற்றது சம்பந்தமாகவும் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தோனேசிய அதிபராகப் பதவியேற்று 10 மாதங்களுக்குள் இந்த ஊழல் குற்றச்சாட்டு. அப்துல் ரகுமான் வாஹிட் மீது சுமத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் இக் குற்றச் சாட்டை விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இந்தோனேசிய அரசியல் சட்டத்தில் அதிகாரம் இருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

அரச பணம் 40 இலட்சம் காணாமல் போனதில் அப்துல் ரகுமான் வாஹிட்டின் உதவியாளர் மோசடி செய்ததாகச் சொல்லப்படுகிறது.

பாராளுமன்ற விசாரணையில் அதிபர் அப்துல் ரகுமான் வாஹிட்டின் குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் பதவி இழப்புடன் தண்டனையும் கிடைக்கும் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர் (து)

## ஈழத் தமிழர் நான்குபேர் ராமேஸ்வரம்பகுதியில்கைது

(சென்னை)

தமிழ் நாட்டின் இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு திரும்ப முயன்ற வேளை நான்கு ஈழத் தமிழ் இளைஞர்களை தமிழக காவல்த் துறையினர் கைது செய்துள்ளனர்.

இராமேஸ்வர கடலூர் கடற்கரைக்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியசரவணபவன்.

இரத்தின சபாவதி, ஞானசேகரன், கரனேந்திரன் ஆகிய நான்கு இளைஞர்களுமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இவர்களின்பெயர்கள்அகதிகளின் பட்டியலில் இல்லை என தமிழக காவல்த் துறையினர் தெரிவித்துள்ளனர்

(த)

நுணங்கியகேள்வியரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது
- குறள் -

# வலம்புரி

## ஒற்றுமையின் பலம்

நடக்குமோ நடக்காதோ அரசியற் கட்சியொன்றின் தலைவரின் உள்ளத்து அவா நிலையையே இங்கு குறிப்பிட விரும்புகிறோம். புளொட் இயக்கத் தலைவர் பின்வருமாறு செய்தியாளர் மகாநாட்டில் கூறியிருகிறார். வடக்குக் கிழக்கில் அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் ஒன்றாகசேர்ந்தால் இருபது ஆசனங்களைப் பெற்று அரசியல் பலத்தைக் காப்பாற்றலாம். அன்றியும் தமிழ்மக்களின் பிரச்சினையைப் பேசவேண்டும், தீர்க்க வேண்டும் என்ற எண்ணப்பாட்டின் மூலகர்த்தாக்கள் விடுதலைப் புலிகள் என்பதை மறுக்க முடியாது என்றும் கூறியிருக்கிறார். உள்ளம் உண்மைக்கு முதன்மை கொடுப்பதையும் விசாலப்பார்வையால் அரசியல் ஞானத்தைத் துலாம்பரப் படுத்துவதையும் காட்டி நிற்கிறது.

இன்றைக்குபிறப்புரிமையான சுதந்திரத்தை இழுபறி நிலையில் வைத்துக் கொண்டு ஏங்குபவர்கள் நாங்கள். வாருங்கள் வடம் பிடிப்போம் என்று கூவி அழைக்கும் நாள் ஒன்று புலருமானால் எதிரிகூடல் நடுங்குவான். நிலைகுலைந்து நெடு மூச்செறிவான். இதனை நம்மவர் உணர வேண்டும். தளம் ஸ்திரப்படுவதோடு பிறரைப் பல வீனப்படுத்தக் கூடாது என்ற புனிதஎண்ணம் புலர வேண்டும். ஒன்று பட்டால் வாழ்வு உண்டு என்ற உணர்வலைகள் எழவேண்டும்.

ஒன்றைக் கூறி வைக்க உள்ளம் நாடுகிறது. நாற்காலி அரசியல் நமதுதுயர் தீர்க்க வில்லையானால் ஒட்டுமொத்தமாக தமிழ்

# குற்றம் பொறுத்து கிருபை நல்கும் விநாயகனின் பாதம் பணிந்து பயன் பல பெறுவோம்

இன்று ஆவணி சதுர்த்தி தினத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது. (ஆ-ர்)

வழிபாடு என்ற சொற் பிரயோகமே கருத்தழிந்து விடுமோ என்று அஞ்ச வேண்டிய காலகட்டத்தில் விநாயக வழிபாடு அவசியமா என்ற வினா விந்தையானது தான்.

விந்தைகள் பல புரிந்து உலகை விளையாட்டுப் பந்தாகமாற்றநிற்கிறது விஞ்ஞானம் "தெய்வம் என்பதோர் சித்தம்" உண்டாதலே கடினமாகி வருகிறது.

இப்படிப்பட்ட சிந்தனைச் சூழலில் அகப்பட்டு கரைசேர முடியாத எமக்கு ஆற்றுப்படை பாடி வழிகாட்டவும் இளைஞர்கூட்டம் ஒன்று இருக்கவே செய்கிறது என்று உணரும்போது உண்டால் அம்ம இவ்வுலகம் "என்று பாடிய பழந்தமிழ்ப்புலவனை நெஞ்சு வாழ்த்துகிறது.

பிரபஞ்சம்மெத்திப்போச்சு என்று சலிப்புக் கொட்டுபவர்களாகவே நம்மில் பெரும் பகுதியினர் வாழ்கிறோம். கோயிலுக்குப் போகலாம் தான் குளிக்கவில்லை என்ற முனகலும் கேட்கிறது.

இதனை அவசரமான உலகம் நமதுஉலகம். "நாய்க்கு வேலையில்லை நடக்க நேரமும் இல்லை" என்ற நாட்டு மொழிஎத்தனை. பொருத்த



மானது எமக்கு.

இந்த நிலையில் இலகுவான வழிபாட்டு முறைகளை இப்படி ஒருகாலம் வரும் என்று முன்னோர் வகுத்தமை பேர் உபகாரமே.

### பட்டி தொட்டி

பட்டி தொட்டி எல்லாம் அமர்ந்து அடியார்களுக்கு அருளை எளிதில் நல்கும் தெய்வமாக விநாயகனைக் காண்கிறோம். வேண்டிய போதெல்லாம் பசுவின் சாணத்திலும். ஆவாகனப்படுத்தக் கூடிய தெய்வமாக அறிவொளியும், அருளொளியும் அல்லல் தீர்க்கும் அருமருந்தும் விநாயகன் என்பது முந்தையோர் துணிவாம்.

இக்கருத்தை வலியுறுத்த எத்தனை கதைகள் முன்னவர்க்கு முன்னவனே முதல் வேண்டும் தெய்வமாகவும், முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகனுக்கு மூத்தவனாய், தமிழ் மூன்றும் எம்பால் எளிதில் கிட்ட வழி செய்யும் தெய்வமாய், இன்னல் போக்க இன்பம் தரும் பிள்ளையாய் விநாயகனை இந்துக்கள் எண்ணுகின்றனர்.

விநாயக வணக்கம் தென் கிழக்காசிய நாடுகள் அத்தனையிலும்பரவி இருக்கிறது. இந்திய நாட்டிலும் இலங்கையிலும் மிகப்பிரசித்தி பெற்ற தெய்வம் விநாயகனே. வரலாற்றுரீதியிலும் அன்பர்க்கருளு தெய்வமாகவிநாயகர் இடம்பெற்றுள்ளார்.

### வாதாபி கணபதி

6-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில வாழ்ந்த நரசிம்மபல்லவனின் சேனாதிபதி பரஞ்சோதியார் வாதாபிக்குப் படைஎடுத்துச் சென்று புலிகேசியை வென்றவரலாறும் அவ்வெற்றிக்கு உறுதுணபுரிந்தவாதாபி கணபதி தமிழ் நாட்டில் திரு கோயில் கொண்ட வரலாறும் உணரும் போது விநாயக வணக்கத்தின் அவசியம் தெளிவாகிறது.

காட்சிக்கும் எளியவனாய் கலக்கம் தீர்க்கும் பெருங் கடவுளாய் அரசன் முதல் ஆண்டிவரை அணுகக்கூடியவனாய் குற்றம் பொறுத்துக் குணம் கண்டு கிருபைதரும் தெய்வமாக நம் முன்னோர் போற்றியவன் விநாயகன்.

தனக்குமேல் ஒருவன்இல்லாத தலைவன் விநாயகன் ஆகவே நம்மால் வணங்கப்படும் முதற்தெய்வமும் இவனே.

க.சிவராமலிங்கம்

[நன்றி ஈழநாடு 985 ஆவணி]

# தென்மராட்சி பாடசாலைகளிலிருந்து 4,000 மாணவர் வெளியேறினரா?

## புள்ளி விபரங்கள் கூறும் தகவல்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்விவலயத்தின் முகாமைக்குட்பட்டிருக்கும் மொத்தம் 71 பாடசாலைகளுள் 58 பாடசாலைகள் இடம்பெயர்ந்த நிலையிலும் மீதியான 13 பாடசாலைகள் இடம்பெயராத நிலையில் தொடர்ந்தும்தென்மராட்சி கிழக்கு பிராந்தியத்தில் இயங்கிவருகின்றன,

இடம்பெயர்ந்த நிலையிலுள்ள 58 பாடசாலைகளும் வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களில் தற்போது இயங்கி வருகின்றன.

இடம்பெயர்வுக்கு முன்னர் தென்மராட்சி கல்வி வலய பணிமனையினால் திரட்டப்பட்ட புள்ளி விபரங்களின் பிரகாரம் சாவகச்சேரி, பளை கல்விக் கோட்டங்களை உள்ளடக்கிய வகையிலுள்ள 71 பாடசாலைகளிலும் மொத்த மட்டுமே கல்வி பயில்வதாக அறியப்படுகின்றது.

இந்தவகையில் 3 ஆயிரத்து 968 மாணவர்கள் பாடசாலைகளை விட்டு வெளியேறியுள்ளனரா அல்லது பாடசாலைகளுக்குச் செல்லாதவர்களா அல்லது வன்னி மாவட்டத்துக்குச் சென்றுவிட்டார் களா என அறியமுடியாமல் உள்ளது.

மேலும் வடமராட்சிப் பகுதியில்இயங்கும் 9தென்மராட்சிப் பாடசாலைகளில் 3 ஆயிரத்து 70 மாணவர்களும்.

வலிகாமம் பகுதியில் இயங்கும் 7 தென்மராட்சிப் பாடசாலைகளில் 2 ஆயிரத்து 137 மாணவர்களும்.

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் இயங்கும் 13 பாடசாலைகளில் 3 ஆயிரத்து 287 மாணவர்களும்-

வடமராட்சி வலய பாடசாலைகளில் 5 ஆயிரத்து 157 மாணவர்களும்-

வலிகாமம் வலய பாடசாலகளில் இணைப்புப் பாடசாலைகளாக இயங்கும் பாடசாலைகளில் ஆயிரத்து மாணவர்களும் கல்விபயின்று 256 வருகின்றனர்.

அத்துடன் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 86 மாணவர்களும் நல்லூர் பிரதேசத்தில் 220 மாணவர்களும், கோப்பாழ பிரதேசத்தில் 950 மாணவர்களும் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் ஆயிரத்து 73 மாணவர்களும் சங்கானை 860 மாணவர்களும் தெல்லிப்பளை பிரதேசத்தில் 703 மாணவர்களும் உடுவில் பிரதேசத்தில் ஆயிரத்து ஒரு மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றனர் என நல்லியடியில் தற்போது இயங்கி வருகின்ற தென்மராட்சி கல்வி வலயப் பணிமனையின் புள்ளி

## சங்கீத, நடன ஆசிரியருக்கு நியமனம்

தமிழ் மொழிமூல அரசினர் பாடசாலைகளுக்கு கீழைத்தேய சங்கீத, நடன, சித்திரக் கலை ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளுதல்-1998 என்னும் திட்டத்திற்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் சித்திரக்கலை ஆசிரியர்கள் இன்று 1 ஆம் திகதி முதல் யாழ் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு நியமனம்செய்யப்படுகின்றார்கள். சம்பந்தப்பட்டோர் தமது நியமனக்கடிதங்களை யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். வலயக்கல்வி அலுவலகத்தின் தற்காலிக பணிமனையில் உடனடியாகப் பெற்று உரிய பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு யாழ்ப்பாண வலய கல்விப்பணிப்பாளர்திருமதி எஸ் மகாலிங்கம் பி. சிவகரன் குமரகோட்டம் கோண்டாவில்

வி. அனட்ராஜ் 10, ராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

பி கஜேந்திரன் நாகவிலா, கொக்குவில் மேற்கு.

உள்ளம் நாடுகிறது. நாற்காலி அரசியல் நமது துயர் தீர்க்க வில்லையானால் ஒட்டுமொத்தமாக தமிழ் மக்கள் பால் கரிசனையுடையவர்கள் தேர்தலை நிராகரிக்கவேண்டும். அன்றேல் ஒன்றாய் நின்று-தீர்வுக்கு உந்து சக்தியாக வேண்டும்.

எங்களிடையே எத்தனை பிளவுகள். எத்தனை சிந்தனை வேறுபாடுகள். இலக்கு ஒன்றானால் அவைஇருக்கவேண்டுமா என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழ் மக்கள் மேல் உள்ள கரிசனை வெவ்வேறு மட்டங்களில் உள்ளதா என்றும் ஐயுற வேண்டியிருக்கிறது. அவ்வாறாயின் வெவ்வேறு சிந்தனையோடுவியாபார நோக்கே தலை தூக்கிறதென்று எண்ணலாமல்லவா?.

தமிழர்கள் வாழவும், துயரில் இருந்து மீளவும் [illegible]கை செய்யலாமென்றால் செய்யட்டும். அன்றேல் அரசியல் மார்க்கம் எதுவும் செய்யாது என்றால் ஒதுங்குவதே புத்திசாலித்தனம்.

அன்புடன் ஆசிரியர்

பட்ட புள்ளி விபரங்களின் பிரகாரம் சாவகச்சேரி, பளை கல்விக் கோட்டங்களை உள்ளடக்கிய வகையிலுள்ள 71 பாடசாலைகளிலும் மொத்தமாக 22 ஆயிரத்து 462 மாணவர்கள் கல்வி பயின்றனர்.

ஆனால் இவ்வருடம் மே மாதத்தில் இடம்பெற்ற இடம்பெயர்வின் பின்னர் திரட்டப்பட்டபுள்ளிவிபரங்களின்பிரகாரம் தென்மராட்சி, வடமராட்சி வலிகாமம் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் மொத்தமாக 18 ஆயிரத்து 490 மாணவர்கள்

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் இயங்கும் 13 பாடசாலைகளில் 3 ஆயிரத்து 287 மாணவர்களும்-

வடமராட்சி வலய பாடசாலைகளில் இணைப்புப் பாடசாலைகளாக இயங்கும் மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றனர் என நெல்லியடியில் தற்போது இயங்கி வருகின்ற தென்மராட்சி கல்வி வலயப் பணிமனையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

(க-77)

## 27வது ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் 27வது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்நாளைசனிக்கிழமையும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெற உள்ளது.

தும்பளை கணக்கிலாவத்தை கோவில் அருகாமையில் உள்ள விளையாட்டரங்கில் தலைவர் எஸ்.பி.விவேகானந்தன் தலைமையில் மேற்படி நிகழ்வு இடம்பெற உள்ளது.

மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டிகள் உட்பட பலநிகழ்வுகள்இடம்பெறவுள்ளன.

(க)

## உலகில் உள்ள எந்த சக்தியாலும் ஜனாதிபதியை பதவிநீக்க முடியாது

### றொனிடீமெல் தெரிவிப்பு

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அதிகப்படியான பெரும்பான்மை வாக்குகளுடன் ஆறுவருடங்களுக்கு ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உலகிலுள்ள எந்த சக்தியாலும் அவரைப் பதவி நீக்கம் செய்ய முடியாது. இவ்வாறு பொருளாதார கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் றொனிடீமெல் தெரிவித்துள்ளார்.

சீதாவெட்ட கைத்தொழில் பேட்டையில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய றொனிடீமெல்மேலும் பேசுகையில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றக் கூடிய திறனும் அதற்குரிய திட்டங்களும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிடம் கைவசம் இருக்கின்றது. எனவும் ஆடை உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டிருந்தபழையபொருளாதாரம் கைதொழில் அபிவிருத்தியை நோக்கியதாக மாற்றி அமைக்கப்படுவது அவசியம் எனவும் கூறினார்.

தற்போது தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை முக்கிய அம்சமாக அமையும் எனவும் தெரிவித்தார்.

தனியார் துறையினரும் அரசுடன் இணைந்த முதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார ரீதியாக நாம் முன்னேற்றமடைய முடியும் எனவும் தெரிவித்தார். (க-2)

## குடும்பப் பெண் காயம்

இராணுவமுகாமை அண்டிய பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் துப்பாக்கி வேட்டிற்கு இலக்காகியுள்ளார்.

மணலைடப்பு இளவாலையைச் சேர்ந்த மாணிக்கம் நல்லம்மா [வயது 55] என்பவரே காயமடைந்தவராவார்.

கோண்டாவில்
வி. அனட்ராஜ் 10, ராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
பி. கஜேந்திரன் நாகவிலா, கொக்குவில் மேற்கு.
எம். டொமினிக்ஜீவா 13/20 டேவிட்வீதி பிரதானவீதி, யாழ்ப்பாணம்.
எம். தர்மகுமார் நுாரணை வீதி, கோண்டாவில் கிழக்கு.
பி. ஜீ. அனுஷா டொரிஜா 19/, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். [சு]

## பஸ் நிலையத்தில் கள் விற்பனை

(கல்வயல்)

கொடிகாமம் மத்திய சந்தைக்கும், பஸ் நிலையத்திற்கும் அருகில் உள்ள இடத்தில் கள். மற்றும் குடிவகைகள் தேவையான அளவு விற்பனை செய்யப்படுகிறது.

அதிக வாடிக்கையாளர்கள் அங்கு சென்று மது அருந்துவதால் பஸ்நிலையத்துக்கு வரும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

இது சம்பந்தப்பட்ட விடயத்தில் மதுவரித் திணைக்களம் தென்னை பனைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவுத் திணைக்களம் என்பனவும் பாராமுகமாயிருப்பது பொதுமக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

(த-111)

# வடமராட்சி கடற்றொழிலாளர்கள்

# சங்கப்பிரதிநிதிகள் - டக்ளஸ்சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் உள்ளகடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின்சமாசப்பிரதிநிதிகள் நேற்று ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்

இச் சந்திப்பின் போது நற்போது வடமராட்சிக் கடலில் அதிகாலை 5 மணி தொடக்கம் காலை 9 மணிவரையே மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்இதனை காலை 9 மணி தொடக்கம் இரவு 10 மணியாக அதிகரிக்க வேண்டுமென்றும்,

மீன்பிடிக்கப்படும் 500 மீற்றர் கடல் வலய எல்லையை மேலும் அதிகரித்துத் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்;

இது குறித்து தான் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார். இச் சந்திப்பின் போது பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனும் கலந்து கொண்டார்; (ந)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அரச,மாகாண சபைகளின் சேவையில் உள்ள களஞ்சியக் காப்பாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை காலைபொண்ட்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது,

இக் கலந்துரையாடலில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் களஞ்சியக் காப்பாளர்களைக் கலந்துகொள்ளுமாறு கட்டேகப்பட்டுள்ளது. (வ)

## வவுனியாவில்...

துலைக்கா, மரிசால் அந்தோனிப்பிள்ளை இறுதி வேட்பாளர்கள் 4 பேரும் பெண்களாவர்.

தலைமை வேட்பாளராகப் போட்டியிடும் எஸ்.எஸ்.எம். அபூபக்கர் கடந்த பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸில் போட்டி இட்டு வெற்றி பெற்று பிரதி சமூக சேவைகள் அமைச்சராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## முடிவுக்குக்...

மாவட்டங்களில் மரச்சின்னத்தின் கீழ் போட்டி இடுவதென்றும் முடிவு செய்துள்ளனர்;

இதே வேளை புத்தளம் நகரசபைத் தலைவராக இருந்த பாகீத்தை மீண்டும் தலைவராக நியமிக்குமாறு மாகாணசபை முதலமைச்சருக்கு ஜனாதிபதி உத்தரவு இட்டுள்ளார்.

பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில்இருந்த இழுபறி நிலைக்கு இணக்கம் காணப்பட்டதை அடுத்து பொது ஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்தெரிவு முடிவுக்கு வந்துவிடுமென்றும் தெரியவருகிறது. (வ)

## புலிகள்...

நொச்சி)

★ கப்டன் துளசிவேந்தன் நாராயணபிள்ளை சதானந்தசிவம் (யாழ்ப்பாணம்)

ஆகிய போராளிகளுடன் கடந்த புதன்கிழமை கனகம் புளியடிப்பகுதியில் இடம் பெற்ற தவறுதலான வெடிவிபத்தில்

★ அன்பரசன் துரைசிங்கம் மோகனதாஸ் (பூநகரி)

என்ற போராளியும் இம் மாதம் 27 ஆம் திகதி அம்பாறைப் பகுதியில் பொலிசாருடன் இடம் பெற்ற மோதலின் போது

★ 2 ஆம் லெப். தர்மேசன் செல்வராசா பகீரதன் (மட்டக்களப்பு)

ஆகிய போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (7)

## நெல்லியடி...

போது அரச ஊழியர்களை கடமைக்குச் செல்ல படையினர் அனுமதித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)


## மங்களகரமான புதுக்கடை திறப்புவிழா

காலம். 2000-09-01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

எங்களிடம் மல்லிகா தொழிலகத்தயாரிப்புகளையும், பவானி விலாஸ் சச்சான் அலுவா, லீலா [சங்கானை] வெதுப்பக பிஸ்கற்வகைகளையும், சண்பிராண்ட் [அளவெட்டி] இனிப்பு ரொபி வகைகளையும், மல்லிகா [பண்ணை முட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும், பெற்றுக்கொள்ளலாம்.

★ மல்லிகா மிக்ஷர் மாளிகை ★




உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள வைபவங்களான பிறந்தநாள் கொண்டாட்டம், பூப்புனித நீராட்டு விழாக்கள், திருமண வைபவங்கள், மற்றும் பாடசாலை, காரியாலய, களியாட்டு விழாக்களுக்கு உங்கள் விருந்தினரை அன்போடு வரவேற்று, நிறைவோடு உபசரித்து விருந்தோம்பி கொண்டாட்டம் குதூகலிக்க, தரம் நாடுவோர் தவறாது நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்-மல்லிகா மிக்ஷர் தொழிலகம்.

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

★ நீங்கள் ஒருமுறை எம்மிடம் வருகை தந்தால், மீண்டும், மீண்டும் சுத்திச் சுத்தி வந்திடச் செய்யும்!

★ கேட்டுக் கேட்டு வாங்கிடச் செய்யும்!!

★ சாப்பிடச், சாப்பிடச், சாப்பிடச் சொல்லும்!!!

மல்லிகா மிக்ஷர், பகோடா, முறுக்கு, தட்டுவடை.

இல;151 மின்சார நிலைய வீதி, பஸ் நிலையத்துக்கு அருகாமை

யாழ்ப்பாணம் (இ.763)

ஸ்ரீ செல்வா

[யாழ்ப்பாணம்]

சத்தியராஜ், குஷ்பு நடித்த

உன்னைக் கண் தேடுதே

CD புதிய பிரதி

காட்சி நேரம்

10-30, 2-00 (ப.தே)

[இ 688]

கஜன்

திரை

ஊர்காவற்றுறை

கார்த்திக், ரேவதி ஜனகராஜ், குஷ்பு நடிப்பில்

கிழக்கு வாசல்

காட்சி நேரம்

பி.ப 8.30 மணி

(இ-658)

ராஜா

யாழ்ப்பாணம்

நவரசநாயகன் கார்த்திக் கௌசல்யா அப்பாஸ் ராதாரவி நடித்த

பூவேலி

10.30, 2.00 [பு/தே

(இ773]


## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவி

செல்வி நாகலிங்கம் நாகேஸ்வரியின்

தந்தையார் நாகலிங்கம்

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

A.97 தாதிய நண்பர்கள்

[1676] யாழ்.போதனா வைத்தியசாலை


தாய்மார்களே! சகோதரிகளே!
அச்சமற்ற நிம்மதியான வாழ்வுக்கு
ஆதரிப்பீர், ஈ.பி.டி.பியை!
அளித்திடுவீர் உங்கள்வாக்குகளை
வீணைச் சின்னத்திற்கே!

(ஈ.பி.டி.பி)

வீணையே உங்கள்சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!




ஈ.பி.டி.பி எடுத்த முயற்சியை அடுத்து வடக்கிற்காக அரசு உள்ளூராட்சி சபைகளிடம் வழங்கிய 5 கோடி ரூபா நிதியில், யாழ்.மாவட்டத்தில் பிரதேச அபிவிருத்திப்பணிகள் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(இ/736)


இப்பத்திரிகை "வலம்புரி" அச்சகம் ... இல: 15, ... யாழ்ப்பாணம் ... 2000 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 01 ஆம் திகதி ...